# கருஞ்சட்டைத் தமிழர்


ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • மே 18, 2019 Weekly E-paper • MAY 18, 2019




# மலைப்பாம்பை விழுங்க மண்புழு ஆசைப்படலாமா?

பொள்ளாச்சி மா.உமாபதி




## வாய் திறப்பார்களா?

சுப.வீரபாண்டியன்

## சரியான முடிவு

தலையங்கம்



## பொய்யர் பிரதமர்

‘பைந்தமிழ்’ பாபு

கருஞ்சட்டைத் தமிழர்
ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● மே 18, 2019 Weekly E-paper ● MAY 18, 2019

# மலைப்பாம்பை விழுங்க மண்புழு ஆசைப்படலாமா?

● பொள்ளாச்சி மா.உமாபதி



“நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி கிளியே!
வாய்ச்சொல்லில் வீரரடி”

இது சீமானுக்குப் பொருந்தும்.

அவரின் கட்சியின் பெயர், கொடி எதுவும் அவருடையது இல்லை.பெயரை ஆதித்தனாரிடம் கடன்வாங்கி, கொடியை விடுதலைப் புலிகளிடம் கடன் வாங்கி உள்ளார். எதுவும் சுயமும் இல்லை; சொந்தமும் இல்லை.

தொடக்கத்தில் "நான் மார்க்சின் மாணவன், பெரியாரின் பேரன், தம்பியின் தம்பி" என்று வாய் ஜாலம் காட்டிவிட்டு, விரைவில் மார்க்சை மறந்தார். பெரியாரைத் தமிழனல்ல என ரத்தப் பரிசோதனையில் கண்டறிந்தார். அவ்வாறு அறிவிக்க வேண்டும் என்பது அவருக்கு படியளக்கும் பெருமாள்களின் கட்டளை. ஒரு கட்டத்தில் பிரபாகரனையும் கைவிட்டார். உடனே அவரது அடித்தளம் ஆட்டம் கண்டதும் ஓடிப்போய் இறுகப் பிடித்துக் கொண்டார்.

சந்தையில் லேகியம் விற்கும் சத்தியவானைப் போல், எந்த சித்தாந்தமும் இன்றித் தானே பேசி, தானே ரசித்து, தானே சிரிக்கும் ஒருவர்தான் சீமான்.

தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும், முத்தமிழ் அறிஞர் கலைஞரையும், மக்கள் தளபதி தலைவர் ஸ்டாலினையும் ஏகடியம் பேசும் இப்பேர்வழிக்கு, காங்கிரசும் பிடிக்காது, கம்யூனிஸ்டும் ஆகாது. திமுகவும் வேண்டாம், அதிமுகவும் வேண்டாம். கமலும் ரஜினியும் தேவையற்றவர்கள். தான் மட்டுமே "யோக்கிய சிகாமணி" என்று கூறிக்கொள்கிறார்.

அதேவேளையில், காமராசரை, ஜீவாவை, முத்து ராமலிங்கத் தேவரை, காயிதேமில்லத்தை, மபொசியை, ஆதித்தனாரை, பழனிபாபாவை, சந்தன வீரப்பனை, பாரதிராஜாவை, அப்பன் என்பார்; தாத்தா என்பார்; முப்பாட்டன் - அப்பத்தா என்றெல்லாம் சொல்வார்.

நூற்றாண்டு கண்ட பேரியக்கமாம் திராவிட இயக்கத்தை அழிப்பதுதான் அவருக்கு இலட்சியமாம்! மலைப்பாம்பை விழுங்க மண்புழு ஆசைப்படலாம்; சாத்தியப்படுமா? குமரி வள்ளுவனை இந்தக் கூழாங்கல் குறை கூறித்திரிகிறது! இமயமலையை வீழ்த்துவதாக இலந்தைக் கொட்டை கனவு காண்கிறது.

தன்னை வியக்கும் சீமானுக்கு, திராவிட இயக்கம் நடத்திய தமிழ் இசைப் போராட்டம் தெரியுமா? கோயில் நுழைவுப் போராட்டம் தெரியுமா? 1938இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் தெரியுமா? பட்டுக்கோட்டை அழகிரிசாமி திருச்சி முதல் சென்னை வரை நடத்திய தமிழர் பெரும்படை பற்றித் தெரியுமா? நடராசனும், தாளமுத்துவும் மொழிப்போர் முதல் களப்பலிகளான வரலாறு தெரியுமா? 1948 இந்தி எதிர்ப்புப் போராட்டம் தெரியுமா? திகவிலிருந்து திமுக பிரிந்தபோது, இரு கழகங்களும் நேர் எதிராகச் செயல்பட்டாலும் 1950 களில் இந்தி எதிர்ப்பில் இரட்டைக் குழல் துப்பாக்கிகளாகச் செயல்பட்டது தெரியுமா?

இட ஒதுக்கீட்டிற்க்கு ஆபத்து வந்தபோது திக, திமுக நடத்திய போராட்டத்தால் இந்திய அரசியல் சட்டமே திருத்தப்பட்டது தெரியுமா?

ராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வித் திட்டம் தெரியுமா? திகவும், திமுகவும் போராடி அதை முறியடித்தது தெரியுமா?

கல்லக்குடிப் போராட்டம் தெரியுமா? அதில் தலைவர் கலைஞர் தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்ததுதான் தெரியுமா?

தமிழர் உரிமைப் போராட்டங்களைப் பண்டிதர் நேரு "நான்சென்ஸ்" என இகழ்ந்தது தெரியுமா? அதனால் அவரைத் திணற வைத்த வரலாறு தெரியுமா?

கைத்தறி நெசவாளர் வாட்டம் போக்கக் கழகத் தலைவர்கள் கைத்தறித் துணிகளை ஊர் ஊராக விற்ற வரலாறு தெரியுமா?

தலைவர் கலைஞர் நடத்திய நங்கவரம் உழவர் போராட்ட வரலாறு தெரியுமா?

எஸ்எம்டி பஸ் தொழிலாளர் போராட்டம் தெரியுமா?

*1952 இல் திமுக தேர்தலில் போட்டியிட முடிவெடுக்காத காலத்தில், பராசக்தி திரைப்படத்தில் "அரகர மகாதேவா என்னும் குரல் ஆகாயத்திற்கு எட்டிப் பயனில்லை; அரசாங்கத்திற்கு எட்டவேண்டும்". என்று வசனம் எழுதி, பின் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின் முதலமைச்சரான கலைஞர் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தை செயல்படுத்திய வரலாறு தெரியுமா?*

*1962 விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் கழக மறவர்கள் பொற்செழியனும், இளஞ்செழியனும் இன்னுயிர் ஈந்தது தெரியுமா?*

*1963 இல் இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழி ஆக்குவதை எதிர்த்து நாடெங்கும் சட்ட எரிப்புப் போராட்டத்தைத் திமு கழகம் நடத்தியது தெரியுமா?*

*அதைத் தொடர்ந்து கலைஞரைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து பாளையங்கோட்டைத் தனிமைச்சிறையில் அடைத்தது தெரியுமா?*

*அந்தப் பாளைச்சிறை எனக்கு யாத்திரைத் தலம் என்று அறிஞர் அண்ணா அறிவித்ததை அறிவீரா?*

*1965 மொழிப்போர்க் களத்தில், கீழப்பழூர் சின்னசாமி, கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன், மாயவரம் சாரங்கபாணி , ஆசிரியர் வீரப்பன், சத்தியமங்கலம் முத்து, கீரனூர் முத்து, விராலிமலை சண்முகம், கோவை தண்டபாணி போன்றோர் தங்கள் தேக்குமரத் தேகங்களைத் தீயின் கொடிய நாக்குகளுக்குத் தின்னக் கொடுத்தும், நஞ்சருந்தியும் மாண்டது தெரியுமா? அவர்கள் அனைவரும் கழகக் காளைகள் என்பதுதான் தெரியுமா?*

*அந்தத் தீரமிக்க போராட்டத்தின்போது உங்கள் மபொசியும், ஆதித்தனாரும் எத்தனை பேர் பின் தொடரக் களம் கண்டார்கள் என்பதைப் பட்டியலிட முடியுமா?*

*1967 தேர்தலில் கல்வி வள்ளல் காமராசருக்கு எதிராகச் சீனிவாசன் என்னும் எளிய மாணவனை நிறுத்திய போதும் மக்கள் காமராசரைத் தோற்கடித்த போது அண்ணா மனம் நொந்தது தெரியுமா?*

*18 ஆண்டு காலம் எதிரெதிர் துருவங்களாகச் செயல்பட்டாலும், தனது ஆட்சியைப் பெரியாருக்குக் காணிக்கை என்ற அறிஞர் அண்ணா அவர்களின் தொண்டு உள்ளம் தெரியுமா?*

*அவர் இம்மாநிலத்துக்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டியதும், சுய மரியாதைத் திருமணத்தைச் சட்டப்படி செல்லுபடியாக்கியதும், இந்தியை விரட்டி இருமொழிக் கொள்கையை அறிவித்ததும் தெரியுமா?*

*1967ஆட்சி மாற்றத்துக்கு முதன்மையான காரணங்களில் ஒன்று அரிசிப் பஞ்சம். அப்போது ரேசன் கடையில் ஆறு அவுன்ஸ் அரிசி போட்டது தெரியுமா? மந்திரிகள் எலிக்கறி உண்ணச் சொன்னது தெரியுமா? திமுக ஆட்சிக்கு வந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்று, குஜராத்திற்கு 2000 டன் அரிசி வழங்கியது தெரியுமா?*

*கலைஞர் ஆட்சியில் இந்தியாவில் வேறெங்கும் இல்லாத குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், கைரிக்சாவை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்சா வழங்கல், கண்ணொளி வழங்கு திட்டம், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் என எண்ணற்ற மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்தியது தெரியுமா?*

*தொடக்கக் கல்வி பெறும் மாணவர்களுக்குச் சத்துணவில் வாரம் 5 முட்டை, மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு இலவச பஸ்பாஸ். பட்டதாரி இல்லாத குடும்பங்களில் இருந்து வரும் முதல் மாணவர்களுக்கு இலவசப் பட்டப்படிப்பு, தொழிற் கல்வி வழங்கியது கலைஞர் ஆட்சி என்பது தெரியுமா?*

*ஏழைப்பெண்கள் திருமண உதவித் திட்டத்தில் பெண் கல்வியை வலியுறுத்தியது தெரியுமா? பெண்களுக்குச் சொத்தில் பங்கு என அறிவித்தவர் கலைஞர் என்று தெரியுமா?*

*விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்தது திமுக ஆட்சி என்பது தெரியுமா? உழவர் சந்தைத் திட்டம் கொண்டு வந்தது கலைஞர் என்பதும், விவசாயிகளின் கடன் தள்ளுபடி செய்ததும் திமுகவின் ஆட்சி என்பது தெரியுமா?*

*இந்தியாவில் வேறெங்கும் இல்லாத அளவிற்கு 24 அரசு மருத்துவக் கல்லூரிகள், 20 தனியார் மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டில்தான் உள்ளன. இந்தியாவில் அதிகப்படியான மருத்துவர்களை உருவாக்கும் மாநிலம் தமிழ்நாடு என்பதும், அதற்குக் காரணம் கலைஞர் என்பதும் தெரியுமா?*

*தனியார் பேருந்துகளை அரசுடமையாக்கி, சேரன், சோழன், பாண்டியன், பல்லவன், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கி, லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு அரசுப் பணியாளர் தகுதி வழங்கியது கலைஞர் என்பது தெரியுமா?*

*தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், தமிழ்நாடு கால்நடைகள் பல்கலைக் கழகம், அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம், அண்ணா (பொறியியல்) பல்கலைக் கழகம், எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகம், கடல்சார் பல்கலைக்கழகம், மத்திய அரசு பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், பாரதிதாசனார் பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் என்று உருவாக்கித் தமிழ்நாட்டைக் கல்வியில் சிறந்த மாநிலமாக ஆக்கியது திமுக ஆட்சி என்பது தெரியுமா?*

*இந்தியாவில் முதன்முறையாக தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த நீதிபதி வரதராசன் அவர்களை முதல் உயர்நீதிமன்ற நீதிபதி ஆக்கிப் பின் முதல் உச்சநீதிமன்ற நீதிபதி ஆக்கிய வரலாறு தெரியுமா?*

*இந்தியாவில் மிகச்சிறந்த அகன்ற சாலைகள், அற்புதமான மேம்பாலங்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடு என்பது தெரியுமா?*

*இன்னும் உண்டு ஏராளம். இவையனைத்தும் எடுத்து காட்டுகளே!*

*எதில் குறை என்றுச் சொல்? எதில் பின் தங்கி உள்ளது என்பதைச் சொல். எதையும் சொல்ல வக்கில்லாமல் ஏமாறும் சிறுபிள்ளைகளிடம் அம்புலிமாமா கதை சொல்லியே காலம் தள்ள முடியுமா? தேர்தலில் நோட்டாவுடன் போட்டியிடும் உம்மைத் தமிழர்கள் வைக்க வேண்டிய இடத்தில்தான் வைப்பார்கள்.*

*சீறும் சிங்கத்தைச் சிறைபிடிக்க, சிலந்தி வலை பின்னிவரும் உன் சிறுபிள்ளைத்தனத்தை நாட்டுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவோம்.* ●

## "சத்தியத்தின் பிள்ளைகள் "வாய் திறப்பார்களா?

**நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ஒரு கூட்டத்தில் பேசும்போது, "தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொண்டால் 400 கோடி தருவதாகச் சொன்னார்கள். தெருக்கோடியில் நின்றாலும் நிற்பேனே இல்லாமல், கோடிகளுக்கெல்லாம் இந்தச் சீமான் மயங்க மாட்டான்" என்று பேசினார். அது மட்டுமல்லாமல், 'நாங்கள் சத்தியத்தின் பிள்ளைகள்' என்று அடிக்கடி கூறிக் கொண்டார்.**

**அந்த சத்தியத்தின் பிள்ளைகளிடம் சில கேள்விகள் -**

**அப்படி 400 கோடி ரூபாய் பேரம் பேசியவர்கள் யார்?அவர்களை பற்றித் தலைமைத் தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவித்தீர்களா? லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறையிடம் புகார் அளித்தீர்களா?**

**நீங்கள் அறிவும், மான உணர்ச்சியும் உடைய சத்தியத்தின் பிள்ளைகள் என்பதால், கண்டிப்பாக இந்நேரம் புகார் கொடுத்திருப்பீர்கள் என்றும், அந்த உண்மைகளை வெளியிடவும் முன்வருவீர்கள் என்றும் நம்புகிறோம்.**

**ஒருவேளை வெளியிடாமல், இதற்கும் விடை சொல்லாமல் மௌனமாக இருந்தால், நீங்கள் மிகப் பெரிய ஊழலுக்குத் துணை போனவர் ஆவீர்கள் என்பதுடன், பேரம் படியாததால்தான் உண்மையை வெளியிட மறுக்கின்றீர்கள் என்றும் ஆகும்.**

**சத்தியத்தின் பிள்ளைகளே, உண்மை அறியக் காத்திருக்கின்றோம் !**

**- சுப. வீரபாண்டியன்**

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியிடுபவர்
கோ.தினகரன்

இணையதளம்
www.keetru.com
www.peravai.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com


டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

அலுவலக நிர்வாகக் குழு: தோழர் எட்வின் தலைமையில், ஸ்ரீவித்யா, கார்த்தி, ஜெயசூர், என்,சரவணன் ஆகிய தோழர்கள் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அலுவலக நிர்வாகக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

-பொதுச்செயளாலர்




தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!
# கருஞ்சட்டைத் தமிழர்

## காங்கிரஸ் கட்சியின் சரியான முடிவு

நடந்து முடிந்துள்ள நாடாளுமன்றத் தேர்தல், ஒரு முதன்மையான வினாவை நம் முன் வைத்தது. "இத்தேர்தல் இந்தியாவின் இறுதித் தேர்தலாக இருக்க வேண்டுமா அல்லது ஜனநாயகம் தொடர வேண்டுமா?" என்பதே அவ்வினா.

மறுபடியும், பாஜக வெற்றிபெற்று, மோடி இந்தியாவின் பிரதமரானால், மிகப் பெரும்பாலும் அவர் தன்னை ஒரு சர்வாதிகாரியாக அறிவித்துக் கொள்ளவே வாய்ப்புகள் மிகுதி. ஆதலால், இத்தேர்தலைப் பொறுத்தவரை, யார் அடுத்து ஆட்சிக்கு வரவேண்டும் என்பதை விட, யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதே கூடுதல் கவனத்திற்கு உரியதாக இருந்தது.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டோரின் இக்கருத்தை நன்கு புரிந்துகொண்ட, காங்கிரஸ் கட்சி, தெளிவாக ஒரு கருத்தை வெளியிட்டுள்ளது. நாங்கள் ஆட்சிக்கு வர வேண்டும் என்று விரும்பியே, தேர்தலில் போட்டியிட்டோம் என்றாலும், அதனை விட, பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்பதுதான் எங்களின் தலையாய நோக்கம். அதனால், பிரதமர் பதவியை வேறு கட்சிக்கு விட்டுக் கொடுக்கவும் தயாராக உள்ளோம் என்று காங்கிரஸ் அறிவித்துள்ளது.

இதே கருத்தை இந்தியாவில் உள்ள வேறு சில பெரிய கட்சிகளும் வெளியிட்டுள்ளன. இந்த நோக்கத்திற்காக மம்தா, மாயாவதி, அகிலேஷ் ஆகியோரைச் சந்திரபாபு நாயுடு பார்க்க இருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

எனவே ஆட்சி அதிகாரம், பிரதமர் பதவி ஆகியனவற்றில் மட்டுமே குறியாக இல்லாமல், நாட்டு நலனில் அக்கறை கொண்டு, காங்கிரஸ் கட்சி எடுத்துள்ள முடிவை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

அடுத்த ஆட்சி பாஜகவின் ஆட்சியாக இருக்கக்கூடாது என்பதே நாடு பற்றிய கவலை கொண்ட அனைவரின் கருத்தாகவும் உள்ளது!

## சென்னை கருந்தரங்கம்



தி.இ.த. பேரவையின் திங்கள் கூட்டம், தலைமை அலுவலகத்தில், தோழர் முத்தையா குமரன் தலைமையில் நடைபெற்றது. பேரவைத் தோழர்கள் புலவர் சுப்பிரமணியன், தாம்பரம் இளங்கோ, ஜெயசூர் ஆகியோர் பேசினர். 'கருப்பும் சிவப்பும் ஒரே நிறம்' என்னும் தலைப்பில் முனைவர் சுந்தரவள்ளி சிறப்புரை ஆற்றினார்.

## திண்டுக்கல் மாவட்டக் கூட்டம்





12.5.2019 அன்று நடைபெற்ற மாவட்டக் கூட்டத்தில், 25.5.2019 அன்று நடைபெற இருக்கும் 'கருஞ்சட்டைப் பெண்கள்', 'கோட்சேயின் துப்பாக்கி பத்திரமாயிருக்கிறது' நூல்கள் ஆய்வரங்கத்திற்கும், தோழர் ஞானசேகர் இல்லத்திருமண விழாவிற்கும் வருகைதரும் பொதுச்செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் அவர்களை வரவேற்று நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

# பொய்யிலே பிறந்த பிரதமர் பெருமானே!

● ‘பைந்தமிழ்’ பாபு

மோடியின் பொய்யுரைகளைக் கேட்டுக்கேட்டு மக்கள் மிகவும் சோர்ந்துவிட்டனர்: என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தன்னுடைய ட்வீட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.



இப்படி ராகுல் மட்டுமல்ல, நெட்டிசன்கள் அனைவரும் கழுவி ஊற்றும் அளவிற்கு மோடி கூறிய பொய்களும், அதன் உண்மைத்தன்மையும்:

குஜராத் மாநிலம் வாத்நகர் ரயில்வே நிலையத்தில் தன்னுடைய 7 வயதில் (அதாவது 1957 ஆம் ஆண்டில்) டீ விற்றதாகப் பிரதமர் மோடி பல நிகழ்ச்சிகளில் பெருமிதத்தோடு கூறியிருக்கிறார். ஆனால் உண்மை என்னவெனில் வாத்நகர் இரயில் நிலையம் அமைக்கப்பட்டதே 1973 ஆம் ஆண்டுதான்.

இல்லாத இரயில் நிலையத்தில் இவர் யாருக்கு டீ விற்றார் என்பதுதான் புரியாத புதிர்.

இது குறித்து வி.எச்.பி. முன்னாள் தலைவர் பிரவீன் தொகாடியா ஊடகங்களில் பேசுகையில், “பிரதமர் மோடி டீ விற்றதே கிடையாது. நான் அவருக்கு 43 ஆண்டுகால நண்பர். மக்களிடம் நன்மதிப்பை பெறுவதற்கே மோடி அப்படிக் கூறினார்” என்றார்.

கர்நாடகாவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் பேசிய பிரதமர் மோடி" 1948-ம் ஆண்டு ராணுவத் தளபதி திம்மையாவையும் பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ணமேனனையும் பிரதமராக இருந்த நேரு அவமானப்படுத்தினார் " எனக் கூறினார்

ஆனால் அரசு ஆவணங்கள் கூறும் செய்தி:1956-இல் துறை இல்லாத அமைச்சராக இருந்த விகே மேனனை 1957 இல்தான் நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சராக நியமனம் செய்தார் நேரு. ஜெனரல் திம்மையாவோ ராணுவ தளபதியாக 1957 முதல் 1961 வரை பதவி வகித்தார்.

இரு வேறு பதவிகளில் இல்லாத இருவரை நேரு அவமானப்படுத்தினார் என மோடி கூறியது வரலாற்றின் பக்கங்களில் வடிகட்டிய பொய்தானே.

அண்மையில் ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில்,

குஜராத் மாநிலத்தில் விரம்கம் என்ற இடத்தில் 1988-ம் ஆண்டு நடந்த அத்வானி பங்கேற்ற பேரணியை டிஜிட்டல் கேமராவில் படமெடுத்து டெல்லியில் உள்ள பத்திரிகை அலுவலகங்களுக்கு இ-மெயில் அனுப்பி வைத்ததாகவும் அடுத்த நாள் காலை அனைத்துப் பத்திரிகைகளிலும் வண்ணத்தில் வெளியாகியிருந்த படங்களைப் பார்த்து அத்வானி வியந்து போனாதாகவும் கூறியிருந்தார்.

இதில் வியப்பு என்னவெனில் 1990 ஆம் ஆண்டு தான் டிஜிட்டல் கேமராக்கள் இந்தியாவில் விற்பனைக்கு வந்தன. மேலும் 1995-ஆம் ஆண்டு தான் இன்டர்நெட் எனப்படும் இணைய வசதி இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

நாடு சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகளாகியும் மின் வசதி இல்லாத 18,000 கிராமங்களுக்கும் மின் வசதி ஏற்படுத்தி இதுவரை இருந்த அரசுகள் செய்யாத சாதனையை மோடியாகிய தானே செய்ததாகத் தம்பட்டம் அடித்ததோடு மட்டுமின்றி நாக்லா ஃபடேலா கிராம மக்கள் சுதந்திர தின விழாவை முதன்முறையாகத் தொலைக்காட்சியில் பார்ப்பது போல் படம் ஒன்றையும் பிரதமர் அலுவலகம் தனது டுவிட்டரில் வெளியிட்டது.

ஆனால் அடுத்த ஒரு மணி நேரத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நாக்லா ஃபடேலா கிராமத்தில் மின்சார வசதி ஏற்பாடு செய்யப்படவில்லை என்றும் டுவிட்டரில் வெளியிட்ட படம் தங்களது கிராமத்தின் படமல்ல என்பதைக் கிராம மக்கள் உறுதி செய்தனர் என்றும் கூறியுள்ளது.

இவற்றையெல்லாம் விட அறிவியல் அறிஞர்கள், மருத்துவர்கள் பங்கேற்ற அறிவியல் மாநாட்டில் “மகாபாரதத்தில் கர்ணன் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கவில்லை. அன்றைய காலக்கட்டத்திலேயே மரபணு அறிவியல் இருந்திருக்கிறது. பிள்ளையாரைப் பாருங்கள் மனித உடலோடு யானையின் தலை பொருத்தப் பட்டிருக்கிறது. அன்றே பிளாஸ்டிக் சர்ஜரி இருந்ததால்தான் இது நடந்திருக்கிறது” என்று அடித்து விட்டதெல்லாம் வேற லெவல்.

இப்படி வாய்க்கு வந்ததையெல்லாம் வரலாறு எனப் பொய் பேசித் திரியும் பிரதமர் மோடியின் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பொய்யுரைகளையும், உளறல்களையும் தொகுத்து *Bluff Master Modi* என்ற பெயரில் வலம் வருகின்றன சமூக வலைத்தளங்கள்.

ஒரு வேளை,

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த
புலவர் பெருமானே -

என எழுதிய கவிஞன் இன்றிருந்திருந்தால்

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த
பிரதமர் பெருமானே -
உம்மைப் புரிந்து கொண்டோம்
உண்மை தெரிந்து கொண்டோம்

என்று பாடியிருப்பான். ●

## திருச்சியில்



15.5.2019 அன்று திருச்சி என்.ஆர். ஐஏஎஸ் அகாடமியில், திராவிடம் எனல் சமூக நீதியே என்னும் தலைப்பில் தோழர் சுபவீ மாணவரிடையே உரையாற்றினார். நிறுவனத்தின் இயக்குனர் விஜயாலயன் தொடக்க உரை நிகழ்த்தினார். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.